**மதுரை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(09-12-2015 – 13-12-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 08-12-2015

**கடந்த கால வானிலை 04-12-2015 முதல் 07-12-2015 வரை**

| **காரணிகள்** | **கடந்த கால வானிலை** |
|---|---|
| மழை (மி.மீ) | 23.5 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 29-30 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 23-24 |
| மேக மூட்டம் | 6-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 71-95 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 7-13 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 13-12-2015 - 8.30 மணி நேரம் வரை**

| **காரணிகள்** | **09.12.15** | **10.12.15** | **11.12.15** | **12.12.15** | **13.12.15** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 4 | 12 | 7 | 1 | 1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 27 | 27 | 27 | 28 | 28 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 23 | 23 | 23 | 24 | 24 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 85 | 85 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 88 | 88 | 88 | 82 | 82 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்றின் திசை | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |

**குறுஞ்செய்தி**

- வரும் ஐந்து நாட்களுக்கு லேசான மற்றும் மிதமான மழை அனைத்து இடங்களிலும் வர வாய்ப்புள்ளது. வானம் மேகமூட்டத்துடன் குளிர்ந்தும் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல்**

**பருவம்: நெல்-வளர்ச்சி பருவம்**

- வரும் தினங்களில் ஆங்காங்கெ லேசான மற்றும் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க மானாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்யவும்.
- நெற்பயிரில் பழுப்பு நிற நோய் காணப்பட்டால். அதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை மேன்கோசெப் 2 கிராம்/ லிட்டர் தெளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றன.
- நெற்பயிரில் பூக்கும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோப்பனொபாஸ் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- நெல் பயிரில் தண்டுத்துளைப்பான் பூச்சி தென்பட்டால், விவசாயிகள் அதனைக் கட்டுப்படுத்த Quinalphos 25 EC1000 ml/ha (or) Phosphamidon 40 SL 600 ml/ha (or) Profenophos 50 EC 1000 ml/ha தண்ணிரில் கலந்து தெளிக்க அறிவுறுத்தப்படுகின்றன.